# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டம்

---

*[1988, செப்தெம்பர் மாதம் 09 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1988, செப்தெம்பர் மாதம் 09 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை: சதம் 90* — *தபாற் செலவு: சதம் 75*

## 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டம்

[1988 செப்ரெம்பர் 9 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 11/88

1936

### 1969 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் 20 தொடக்கம் 25 வரையிலான பிரிவுகளை மாற்றீடுசெய்தல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தொன்பதாம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் (இது இதனகத்துப் பின்னர் " முதன்மைச் சட்டவாக்கம் " எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 20 தொடக்கம் 25 வரையிலான பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"உள்ளூரதிகார சபைகளின் மின்சார பொறுப்பு முயற்சிகளைச் சபைக்குக் கைமாற்றுதல்.

20. அமைச்சரானவர் உள்ளூரதிகாரசபை ஒன்றின் அதிகார இடப்பரப்பினுள் இருக்கும் பாவனையாளர்களுக்கு மேலும் திறமையான சேவையை வழங்குவதற்கான தேவையைக் கவனத்திற்கொண்டும், மின் விநியோகத்தின் வீணழிவைத் தடுப்பதற்காகவும், சபையின் விதப்புரையின்மீது, கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின் (இது இதனகத்துப்பின்னர் " உரித்தாக்கற் கட்டளை " எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 205 ஆம் அத்தியாயமான மின்சாரச் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற நிறுவனம் என்ற தன்மையில் உள்ளூரதிகாரசபை ஒன்றினால் கொண்டுநடாத்தப்படும் மின்சார பொறுப்பு முயற்சிகளை உரித்தாக்கற் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதியிலிருந்து (இது இதனகத்துப்பின்னர் " உரித்தாக்கல் தேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) பயனுறும்படி சபைக்கு உரித்தாக்கலாம்.

மின்சார பொறுப்பு முயற்சிகளைச் சபைக்கு உரித்தாக்கல்.

21. உள்ளூரதிகாரசபை ஒன்றினால் கொண்டுநடாத்தப்படுவனவும் 20 ஆம் பிரிவின்கீழான ஓர் உரித்தாக்கற் கட்டளைமூலம் சபைக்கு உரித்தாக்கப்படுவனவுமான மின்சார பொறுப்புமுயற்சிகளுக்குப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) (i) பொறுப்புமுயற்சியின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட உள்ளூரதிகாரசபையின் எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும்;

(ii) (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய, அத்தகைய பொறுப்புமுயற்சியுடன் தொடர்புடையவையும், அல்லது சம்பந்தப்பட்ட

வையும் அத்துடன் உரித்தாக்கல் தேதி யன்று உளதாயிருப்பவையுமான உள்ளூரதிகாரசபையின் எல்லா உரிமைகளும், கடப்பாடுகளும், பொறுப்புக்களும்,

அத்தகைய தேதியிலிருந்து பயனுறுவதாகச் சபைக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்;

(ஆ) அத்தகைய மின்சார பொறுப்புமுயற்சியுடன் தொடர்புடைய அல்லது சம்பந்தப்பட்ட உரித்தாக்கற் தேதியன்று முடிவுறாதிருக்கின்ற உள்ளூரதிகாரசபையால் அல்லது அதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் சபையால் அல்லது சபைக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும் ஆகும் எனக் கருதப்படல் வேண்டும்;

(இ) உரித்தாக்கற் திகதிவரை உள்ளூரதிகாரசபையின் பாவனையாளர்களிடமிருந்து வருமதியாகவுள்ள பணத்தொகை நீங்கலாக, சபையால் தொகையாக விநியோகிக்கப்பட்ட மின்சக்தி தொடர்பில் உரித்தாக்கற் தேதியன்று அத்தகைய உள்ளூரதிகாரசபையால் சபைக்குச் செலுத்தப்படற்பாலதான எல்லாப் பணத்தொகைகளும், அத்தகைய உள்ளூரதிகாரசபையால் சபைக்குச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

*உரித்தாக்கற் கட்டளை ஒன்றின் பயன்.*

22. (1) மின்சாரச் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற நிறுவனம் ஒன்று என்ற தன்மையில் மின்சாரப் பொறுப்புமுயற்சி ஒன்றைக் கொண்டுநடாத்தும் உரித்தாக்கற் கட்டளையிற் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள உள்ளூர் அதிகாரசபையானது அச்சட்டத்தின்கீழ் உரித்தாக்கற் தேதியிலிருந்து பயனுறும்படி உரிமம்பெற்ற நிறுவனம் ஒன்றாக இல்லாதொழிதல் வேண்டும்.

(2) மின்னதிகாரச் சட்ட ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பயனுடையதாதல் வேண்டும்.

*உரித்தாக்கப்பட்ட சொத்தைக் கையேற்றல்.*

23. (1) உரித்தாக்கற் கட்டளை ஒன்றுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்திற்காக சபையின் தவிசாளரால் அதன் சார்பாக எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் எவரேனும் அலுவலர், இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய அத்தகைய கட்டளையால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை உடைமையில் எடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அலுவலர் எழுத்துமூலமான அறிவித்தல் மூலம்—

(அ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டிய தான அத்தகைய திகதியன்றும் அத்தகைய நேரத்திலும் இடத்திலும் அத்தகைய அலுவலர் அத்தகைய ஆதனத்தைச் சபைக்காகவும் சபையின் சார்பாகவும் உடைமையில் எடுக்க முன்னம் கொண்டுள்ளாரென உள்ளூர் அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும்; அத்துடன்,

(ஆ) உள்ளூர் அதிகாரசபையின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரை அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அந்நேரத்திலும் இடத்திலும் சமுகமளிக்கும்படியும், அத்தகைய ஆதனத்தை அத்தகைய அலுவலர் உடைமையிலெடுப்பதற்கு உதவிசெய்யும்படியும் தேவைப்படுத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையின் அலுவலர் ஒருவரால் ஏதேனும் ஆதனம் உடைமையில் எடுக்கப்பட்டுள்ளதன் பின்னர் அத்தகைய ஆதனத்தை அவர் உடைமையில் எடுத்துள்ளார் என்று பயனுறுகின்ற சான்றிதழொன்றை அத்தகைய அலுவலர் அதிகாரசபைக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கொடுக்கத் தேவைப்படுத்தப்படும் அறிவித்தல் ஆனது அது பதிவுத் தபால் மூலம் உள்ளூர் அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டிருந்தாற்போன்று கொடுபட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் அறிவித்தலின் ஏதேனும் தேவைப்பாட்டோடு நியாயமான காரணமின்றி இணங்கியொழுகத் தவறும் ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓர் ஆண்டை விஞ்சாத ஒரு காலப் பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற் தண்டனை, குற்றப்பணம் இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

சபைக்காகவும் சபையின் சார்பாகவும் ஆதனத்தின் உடைமையை எடுத்தலைத் தடுத்தல் அல்லது இடையூறு செய்தல்.

24. (1) 23 ஆம் பிரிவின்கீழ் சபைக்காகவும் சபையின் சார்பாகவும் ஏதேனும் ஆதனத்தை சபையின் எவரேனும் அலுவலர் உடைமையில் எடுப்பதைத் தடுக்கும் அல்லது இடையூறுசெய்யும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓர் ஆண்டை விஞ்சாத ஒரு காலப்

பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கு, அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற் தண்டனை, குற்றப்பணம் இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) 23 ஆம் பிரிவின்கீழ் சபைக்காகவும் சபையின் சார்பாகவும் ஏதேனும் ஆதனத்தை உடைமையிலெடுக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனும் சபை அலுவலருக்கு, ஏற்படுத்தப்பட்டுள்ள அல்லது ஏற்படுத்தப்படக்கூடியதான ஏதாவது இடையூறு அல்லது எதிர்ப்புக் காரணமாக அத்தகைய ஆதனத்தை உடைமையிலெடுத்தல் இயலாமலிருக்குமிடத்து அல்லது இயலாமலிருக்குமென அவர் உணருமிடத்து, அவ் ஆதனம் வைக்கப்பட்டுள்ள அல்லது அமைந்துள்ள இடம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் வருகின்றதோ அந்நீதிவான் நீதிமன்றத்தில் அது தொடர்பாக விண்ணப்பம் ஒன்றை அவர் செய்வதன்மேல் சபைக்காகவும் சபையின் சார்பாகவும் அவ்வாதனத்தின் உடைமையை அவரிடம் ஒப்படைக்குமாறு, நீதிமன்ற, அலுவலரொருவரைப் பணிக்கும் நீதிமன்றக் கட்டளை ஒன்றைப் பெற அத்தகைய சபை அலுவலர் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் அலுவலர் ஒருவருக்குக் கட்டளை ஒன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து அவர் உடனடியாக அக்கட்டளையை நிறைவேற்ற வேண்டுமென்பதுடன் அக்கட்டளை எம்முறையில் நிறைவேற்றப்பட்டதென்பதை எழுத்து மூலம் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, நீதிமன்றத்தின் பணிப்பின் கீழ் செயற்படும் நீதிமன்ற அலுவலர், கட்டளை தொடர்புபடுத்துகின்ற ஏதேனும் அசைவுள்ள ஆதனம் வைக்கப்பட்டுள்ள ஏதேனும் இடத்தினுள் நுழைந்து அத்தகைய ஆதனத்தைக் கைப்பற்றவும் அல்லது கட்டளை தொடர்புபடுத்துகின்ற ஏதேனும் காணியுள், கட்டிடத்தினுள் அல்லது வேறு அமைப்பினுள் நுழைந்து அதனை இருப்பாட்சி செய்யும் ஆள் எவரையும் வெளியேற்றிவிட்டு அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின், காணியின், கட்டிடத்தின் அல்லது வேறு அமைப்பின் உடைமையை சபைக்காகவும் சபையின் சார்பாகவும் உடைமையில் எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆளிடம் ஒப்படைப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான பலாத்காரத்தைப் பயன்படுத்தலாம்.

உள்ளூர் அதிகார சபைகளிடமிருந்து தகவல்களைக் கோருவதற்கான சபையின் தத்துவங்கள்.

25. (1) 20 ஆம் பிரிவின் கீழ் அமைச்சர் அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பது பற்றி அவருக்கு ஆலோசனை கூறுவது சபையின் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதன் கடமைகளைப் புரியும் நோக்கத்துக்காகச் சபையானது—

(அ) அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளை நடாத்தலாம். அத்துடன் உள்ளூர் அதிகாரசபை ஒன்றினால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் மின்சார பொறுப்புமுயற்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பரிசோதிக்கலாம் ; அத்துடன்,

(ஆ) அத்தகைய பொறுப்புமுயற்சிகள் சம்பந்தமாகச் சபை அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விபரங்களையும் வேறு தகவல்களையும் சபைக்குச் சமர்ப்பிக்குமாறும் அத்தகைய விபரங்களை அல்லது தகவல்களைக் கொண்டுள்ள புத்தகங்களை அல்லது ஆவணங்களைப் பரிசோதனைக்காகக் காண்பிக்குமாறும் அத்தகைய உள்ளூர் அதிகார சபையை அல்லது அத்தகைய உள்ளூரதிகார சபையின் அலுவலர் எவரையும் பணிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் சபையால் விடயத்துக்கேற்றவாறு உள்ளூரதிகார சபை ஒன்றுக்கு அல்லது அத்தகைய உள்ளூரதிகார சபையின் எவரேனும் அலுவலருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுக வேண்டியது அத்தகைய உள்ளூர் அதிகார சபையின் அல்லது அத்தகைய அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையோடு நியாயமான காரணமின்றி இணங்கியொழுகத் தவறும் உள்ளூர் அதிகார சபை ஒன்றின் அலுவலர் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓர் ஆண்டை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற் தண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது அத்தகைய மறியற் தண்டனை, குற்றப்பணம் இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 தொடக்கம் 30 வரையிலான பிரிவுகளை நீக்குதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 தொடக்கம் 30 வரையிலான பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"உள்ளூர் அதிகார சபை ஒன்றின் மின்சாரப் பொறுப்பு முயற்சி ஒன்றை சபைக்கு உரித்தாக்குவதன் மேல் ஆளணியினருக்கு ஊழியமளித்தல்.

33. உள்ளூர் அதிகார சபை ஒன்றினால் கொண்டு நடாத்தப்படும் மின்சாரப் பொறுப்புமுயற்சியொன்றை 20 ஆம் பிரிவின் கீழ் சபைக்கு உரித்தாக்குவதன் மேல் உரித்தாக்கற் திகதிக்கு நேர் முந்திய நாளன்று அத்தகைய பொறுப்புமுயற்சியில் பிரத்தியேகமாக ஊழியத்துக்கமர்த்தப்பட்டவர்களும் அத்துடன் ஒன்றில்,

(அ) சபையில் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபையில் ஊழியம் வழங்கப்படாதவர்களும்; அல்லது

(ஆ) அத்தகைய ஊழியம் வழங்கப்பட்ட ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளாதவர்களுமான அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(1) உள்ளூராட்சிச் சேவையின் ஓர் உறுப்பினராகவும் உரித்தாக்கற் திகதியன்று ஐம்பத்தைந்து வயதை அடைந்தவராகவும் உள்ள அத்தகைய ஒவ்வொரு அலுவலரும் அல்லது சேவையாளரும் அத்திகதியன்று அத்தகைய உள்ளூரதிகார சபையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளாரெனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஓய்வின்மேல் உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதிய ஒழுங்குவிதிகளின்கீழ் அவருக்கு வழங்கப்படக்கூடியதான அத்தகைய ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) உள்ளூராட்சிச் சேவையின் ஓர் உறுப்பினராகவும் உரித்தாக்கற் திகதியன்று ஐம்பத்தைந்து வயதை அடைந்தவராகவும் உள்ள அத்தகைய ஒவ்வொரு அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் பதவி அத்திகதியிலிருந்து பயனுறும்படி ஒழிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அவர் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையிலிருந்து பதவி ஒழிக்கப்பட்டதன் காரணமாக அத்தேதியன்று ஓய்வு பெற்றிருந்தால் உள்ளூராட்சிச் சேவை ஒழுங்குவிதியின்கீழ் அவருக்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய ஓய்வூதியத்திற்கு அல்லது வேறு அளிப்பிற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(3) உள்ளூராட்சிச் சேவையின் ஓர் உறுப்பினர் அல்லாதவராகவும் அத்துடன் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஓய்வூதியத் திட்டத்தின் ஓர் உறுப்பினராகவும் அத்துடன் அத்திகதியன்று ஐம்பத்தைந்து வயதை அடைந்தவராகவும் உள்ள அத்தகைய ஒவ்வொரு அலுவலரும் அல்லது சேவையாளரும், அத்திகதியன்று அத்தகைய உள்ளூர் அதிகாரசபையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளாரெனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஓய்வின்போது அத்தகைய திட்டத்தின்கீழ் அவருக்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய ஓய்வூதியத்திற்கு அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(4) உள்ளூராட்சிச் சேவையின் ஓர் உறுப்பினர் அல்லாதவராகவும் அத்துடன் அந்த உள்ளூர் அதிகாரசபையினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஓய்வூதியத் திட்டத்தின் ஓர் உறுப்பினராகவும் அத்துடன் உரித்தாக்கற் திகதியன்று ஐம்பத்தைந்து வயதை அடையாதவராகவும் உள்ள அத்தகைய ஒவ்வொரு அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் பதவி அத்திகதியிலிருந்து பயனுறும்படி ஒழிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அவர் அத்தேதியன்று அத்தகைய உள்ளூர் அதிகாரசபையிலிருந்து பதவி ஒழிக்கப்பட்டதன் காரணமாக ஓய்வு பெற்றிருந்தால் அத்தகைய திட்டத்தின்கீழ் அவருக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய ஓய்வூதியத்திற்கு அல்லது வேறு அளிப்பிற்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு ஏற்புடையவரல்லாத அத்தகைய ஒவ்வொரு அலுவலரும் அல்லது சேவையாளரும் உரித்தாக்கற் திகதியன்று அத்தகைய உள்ளூர் அதிகாரசபையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளாரெனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய உள்ளூர் அதிகாரசபையில் அவருடைய சேவைக்காலப்பகுதியைக் கவனத்திற்கொண்டு உள்ளூராட்சி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தொகைப் பணக்கொடைக் கொடுப்பனவு ஒன்றுக்கு அவர் உரித்துடையவராதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு "உள்ளூர் அதிகார சபை" என்ற வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"உள்ளூர் அதிகாரசபை" என்பது ஏதாவது மாநகரசபை. நகரசபை, அபிவிருத்திச் சபை, பிரதேச சபை என்று பொருளாவதுடன், அத்தகைய ஏதாவது சபையால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அத்துடன் நிறைவேற்றப்படும் தத்துவங்களுக்கு, கடமைகளுக்கு அத்துடன் பணிகளுக்குத் தோதான அல்லது அவைபோன்ற தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிப்பதற்கென புரிவதற்கென அத்துடன் நிறைவேற்றுதற்கென ஏதாவது சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் தாபிக்கப்பட்டதுமான ஏதாவது அதிகாரசபையையும் உள்ளடக்கும்.